

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 137 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 11 – புதன்கிழமை 27 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 137 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 11 - Wednesday 27 December 2023 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## மழை வெள்ளம் : நெல்லை மாவட்டத்தில் உயிரிழந்த

# 16 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

நெல்லை, டிச. 27-

**திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் கால்நடைகளை இழந்தவர்களுக்கும் நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது. வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு மற்றும் கால்நடைகள் இழந்தவர்களுக்கு நிவாரணத் தொகையினையும், நிவாரணப் பொருட்களையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (25.12.2023) வழங்கினார்.

### அதி கனமழையால் அதிகளவு பாதிப்புகள்!

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த கனமழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. தாமிரபரணி ஆற்றில் அதிக அளவுகளுக்கு மேல் தண்ணீர் வந்ததால் பல்வேறு இடங்களில் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்பட்டது. இந்த மழையானது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிகளவு



பாதிப்புகள் ஏற்படுத்தியது.

### போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள்!

முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் அனுப்பி வைத்து மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டதன் அடிப்படையில், மீட்புப்பணிகள் துரிதபடுத்தப் பட்டு,போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்!

பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கனமழை வெள்ளத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் 16 நபர்கள் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், 67 மாடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.37,500/– வீதமும், 1064 வீடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.10,000/– வீதமும், 504 ஆடுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.4000/– வீதமும், 135 கன்றுகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.20,000/– வீதமும், 28,392 கோழிகள் இழந்தவர்களுக்கு தலா ரூ.100/– வீதம் 2 கோடியே 87 இலட்சத்து 7 ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

### வீடு – கால்நடைகள் இழந்தோருக்கு நிவாரணத் தொகை!

இன்றைய தினம், முதல் கட்டமாக நீரில் மூழ்கி மற்றும் மின்சாரம் தாக்கி இறந்த 11 நபர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதமும், வீடு இழந்த 5 நபர்களுக்கு தலா ரூ.10,000/– வீதமும், மாடு, ஆடு, கோழி இழந்த 5 உரிமையாளர்கள் என மொத்தம் 21 நபர்களுக்கு ரூ.58 இலட்சத்து 14 ஆயிரம் நிவாரணத் தொகையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாட்டு பொதுமக்களை பாதுகாக்கும் அரசாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நிவாரணப் பணிகளை அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள்.

இந்நிகழ்வில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் தாக்கரேசுபம் ஞானதேவ்ராவ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான், துணைமேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், பேரிடர் வட்டாட்சியர் செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2023) முகாம் அலுவலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அறக்கட்டளை சார்பில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

## இயற்கை பேரிடர்: இமைப்பொழுதும்

# துஞ்சாது, ஓய்வின்றி பணியாற்றும் முதல்வர்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பாராட்டு!

சென்னை, டிச. 27–

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கி, இயற்கை பேரிடரின் போது, அச்சவால்களை எதிர்கெண்டு போர்க்கால அடிப்படையில் மக்களை காக்கும் பணியினை சிறப்புடன் ஆற்றியதற்காக பாராட்டினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023) முகாம் அலுவலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் அறக்கட்டளை சார்பில் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

இச்சந்திப்பின்போது, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள், மழை வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் எதிர்பாராத பெரும் தாக்குதலை நிகழ்த்தியபோது, அந்த சவால்களை எதிர்கொண்டு போர்க்கால அடிப்படையில் மக்களை காக்கும் பணியில் இமைப்பொழுதும் துஞ்சாது ஓய்வின்றி சுற்றிச்சுழன்று பணியாற்றும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பாராட்டினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு இச்சந்திப்பின்போது உடனிருந்தார்.

## பேரிடர் காலத்திலும் அரசியல் செய்கிறார் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன்!

# நிர்மலா சீதாராமன் தகுந்த நிதியை வழங்குவார் என்று நம்புகிறேன்!

## நெல்லையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

நெல்லை, டிச.27-

**நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் வைத்து நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 16 பேரில் முதல் கட்டமாக 11 நபர்கள் குடும்பத்திற்கு தலா ரூபாய் 5 லட்சம் வீதம் நிவாரணத் தொகை மற்றும் நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப், மேயர் சரவணன், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

நெல்லை மாவட்டத்தில் முதற்கட்டமாக 11 உயிரிழந்த நபர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளோம். கால்நடைகள், விளை நிலங்கள் பாதிக்கப்படுபவர்களுக்கும் முதற்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அனைத்து பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும். 10 நாட்களாக அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் களத்தில் பணி செய்கிறார்கள். தற்போது அரசியல் வேண்டாம் குளம் தூர்வாரும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### தமிழிசை அரசியல் பேசுகிறார்!

ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் அரசியல் பேசுகிறார். வரலாறு காணாத 100 ஆண்டுகளில் இல்லாத அளவு கனமழை பெய்ததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பணிகள் நடப்பது பற்றி மக்களுக்குத் தெரியும். மக்கள் இந்த பிரச்சினையை புரிந்து கொள்வார்கள்.

மலை கிராமமான மாஞ்சோலைக்கு பேருந்து போக்குவரத்து துவங்காத நிலையில் மக்கள் இலவசமாக வேன் உள்ளிட்ட வாகனங்களில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பேரிடர் இல்லை என்று கூறிய ஒன்றிய நிதி அமைச்சர் பேரிடர் பாதிப்புகளை பார்வையிட 27.12.2023 அன்று தூத்துக்குடி வருகிறார். முறையாக பார்வையிட்டு தகுந்த ஆய்வு செய்து நிதி வழங்குவார் என்று நம்புகிறோம்.

பிரதமர் மோடி அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தற்போதைய நிலைமை குறித்து பேசி உள்ளார். முதலமைச்சர் அவர்களும் நிலைமையை எடுத்து கூறி, கூடுதல் நிதி கோரி உள்ளார்கள். பிரதமர் அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, தூத்துக்குடி வரக்கூடிய ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து தகுந்த நிதி தருவார் என நினைக்கிறேன்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம.மைதீன் கான், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் துணை மேயர் ராஜ் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## டெல்லியில் கடும் பனிமூட்டம்:

# விமான சேவை பாதிப்பு...!

டெல்லி, டிச.27-

நாட்டின் வடமாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் பனிமூட்டம் நிலவி வருகிறது. இதனால், வாகன ஓட்டிகள் மிகுந்த அவதிக்குள்ளாகியுள்ளனர். சாலையில் முன்னே செல்லும் வாகனங்கள் தெரியாததால் முகப்பு விளக்குகளை போட்டபடியே வாகன ஓட்டிகள் பயணிக்கின்றனர்.

இந்நிலையில், கடும் பனிமூட்டம் காரணமாக டெல்லியில் விமான போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ளது. ஓடுதளம் தெரியாதவகையில் பனிமூட்டம் இருப்பதால் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

## டி.என்.பி.எஸ்.சி. குரூப் 2

# காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

சென்னை, டிச.27-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ பதவிகளில், 5 ஆயிரத்து 413 பணியிடங்கள் இருந்தன. இதற்கான, முதல்நிலை எழுத்துத் தேர்வு கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான முதன்மை எழுத்து தேர்வு கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்றது. குரூப் 2 மற்றும் 2ஏ தேர்வுகளுக்கான முடிவுகள் விரைவில் வெளியாக உள்ளன.

இந்நிலையில், குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை 5 ஆயிரத்து 860 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கான விவரங்களை www.tnpsc.gov.inஎன்ற இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 27-12-2023

# பெண்ணினத் துரோகமும் பாலியல் நட்பும்

மல்யுத்தத்தில் இருந்து விடை பெற்று விட்டார் சாக்சி மாலிக்!

பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைப்பதாக அறிவித்து விட்டார் பஜ்ரங் புனியா!

பாலியல் குற்றச்சாட்டுக்கு ஆளான பிரிஜ் பூஷன் சரண்சிங் மீது இது வரை நடவடிக்கை இல்லை!

பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் உதவியாளர் சஞ்சய் சிங் - இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் புதிய தலைவர் ஆகிவிட்டார்!

பாலியல் புகாருக்கு உள்ளான கூட்டத்தைக் காப்பாற்றி விட்டது பா.ஜ.க.!

இதன் மூலமாக பெண்ணினத்துக்குச் செய்த துரோகம் அம்பலமாகி விட்டது!

**பெண் ஷக்தி என்று பேசும் தகுதியை பா.ஜ.க. இழந்துவிட்டது!**

**இதைவிடக் கேவலம், மகாக்கேவலம், மகாமகா கேவலம் இருக்க முடியுமா?**

**ஒரே ஒரு தனிமனிதன்தான் பிரிஜ் பூஷன் சரண் சிங். அவரைக் காப்பாற்ற எவ்வளவு கேவலமான முடிவையும் எடுப்போம் என்றால் பா.ஜ.க. தலைமையின் மனதுக்குள் எந்தளவுக்கு அறமற்ற சிந்தனை அரங்கேறி இருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் மல்யுத்த வீராங்கனைகள் விவகாரத்தில் நடந்தது.**

2023 ஆம் ஆண்டு முடியப் போகிறது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த பிரச்சினை வெளிச்சத்துக்கு வந்தது. கடந்த ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகட், சாக்சி மாலிக், பஜ்ரங் புனியா ஆகியோர் பா.ஜ.க. எம்.பி.யும், இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷண் ஷரண் சிங் மீது பல கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தினர். பிரிஜ் பூஷண் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாக வினேஷ் போகட் அழுதுகொண்டே கூறினார். மல்யுத்த வீராங்கனைகள் போராட்டம் நடத்தினார்கள்.

ஊடகங்களில் இது பெரிதாக ஆனதும், வேறு வழியில்லாமல் ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார்கள். இந்தக் குழுவை அமைப்பதற்கே ஒருவார காலம் ஆனது. இந்த குழுவின் தலைவராக மூத்த குத்துச்சண்டை வீராங்கனை எம்.சி.மேரி கோம் தேர்வு செய்யப்பட்டார். விசாரணையை நான்கு வாரங்களுக்குள் முடிக்குமாறு குழுவுக்கு உத்தரவிடப்பட்டது. குழு அமைக்கப்பட்டது ஜனவரி 23 ஆம் தேதி. அப்படியானால் பிப்ரவரி 23 ஆம் தேதிக்குள் குழுவின் அறிக்கை கொடுக்கப்பட்டு நடவடிக்கை பாய்ந்திருக்க வேண்டும். குழு தனது அறிக்கையைக் கொடுத்ததே தவிர, அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை பொதுவெளியில் சொல்லவில்லை. மல்யுத்த வீராங்கனைகள் மீண்டும் போராட்டம் நடத்தினார்கள்.

நேரடியாகவே, ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷண் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ் காவல் நிலையத்திற்கு புகார் செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீஸார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏப்ரல் 23 ஆம் தேதி ஒலிம்பிக் பதக்கம் வென்ற மல்யுத்த வீரர்களான பஜ்ரங் புனியா, சாக்சி மாலிக், வினேஷ் போகட் தலைமையில் மல்யுத்த வீரர்கள் இரண்டாவது முறையாக பிரிஜ்பூஷண் ஷரண்சிங்குக்கு எதிராக களமிறங்கினார்கள். அந்தப் போராட்டம் பல மாதங்கள் தொடர்ந்தது. பிரியங்கா காந்தி, போராட்டக் களத்துக்கு நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார். ஏன் வழக்கு பதியவில்லை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். உடனே, ஏப்ரல் 29 ஆம் தேதி பா.ஜ.க. எம்.பி. மீது டெல்லி கனோட் ப்ளேஸ் காவல் நிலையத்தில் இரண்டு எஃப்.ஐ.ஆர்.கள் பதிவு செய்யப்பட்டது. ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, மூத்த கிரிக்கெட் வீரர் கபில் தேவ், ஒலிம்பியன் அபினவ் பிந்த்ரா ஆகியோர் இந்த வீராங்கனைகளுக்கு ஆதரவு அளித்தார்கள்.

அதன்பிறகாவது விசாரணை முறையாக நடந்ததா என்றால் இல்லை. போக்சோ சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்துவிட்டார்கள். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தி வருவதாக நாடகம் ஆடிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பில் பிரிஜ் பூஷன் சரண் சிங் ஆதிக்கம் தொடரவே செய்தது. இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவருக்கான தேர்தலில் பிரிஜ் பூஷன் சரண்சிங்கின் உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வாகி இருக்கிறார். இதை விட அசிங்கம் இருக்க முடியாது.

**“நாங்கள் எங்கள் இதயத்தில் இருந்து போராடினோம். ஆனால் பிரிஜ் பூஷனின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங்கே இப்போது தலைவராக தேர்வாகி இருக்கிறார். இதனால் நான் மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். நாங்கள் ஒரு பெண் தலைவராக வர வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் அது நடக்கவில்லை**” என்று கண்ணீர் மல்கச் சொல்லி விட்டு தனது ஷூவை செய்தியாளர்கள் முன்னால் வைத்து விட்டு மல்யுத்த வீராங்கனை சாக்சி மாலிக் வெளியேறி இருக்கிறார். ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கான பதக்கம் வென்று தந்தவர் இவர். 2009 முதல் பல்வேறு பதக்கங்களைப் பெற்றவர் இவர்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீரர் பஜ்ரங் புனியா. அவரும் மல்யுத்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்து இருக்கிறார். பிரதமர் மோடிக்கு அவர் கடிதம் எழுதி உள்ளார். **“அன்புள்ள பிரதமரே! ஜனவரி மாதம் பிரிஜ் பூஷனுக்கு எதிராக 19 பேர் புகார் சொன்னார்கள். அந்த எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தில் 7 ஆக குறைந்தது. 12 பேரை மிரட்டி விட்டார் பிரஜ் பூஷன். நாங்கள் போராட்டம் நடத்திய தளம் இடிக்கப்பட்டது. போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டது. நாங்கள் வென்ற பதக்கங்களை கங்கையில் வீச முடிவெடுத்தோம். இப்போது பிரஜ் பூஷனின் கூட்டாளியே தலைவராக வந்துவிட்டார். இந்த தேர்வால் நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன். எனது பத்மஸ்ரீ விருதையும் திருப்பி ஒப்படைக்கிறேன்**” என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

**பெண் ஷக்தி என்று பேசும் தகுதியை பா.ஜ.க. இழந்துவிட்டது!**

**இதைவிடக் கேவலம், மகா கேவலம், மகா மகா கேவலம் இருக்க முடியுமா?**

## தமிழ்நாட்டில் 29 பேருக்கு கொரோனா!

சென்னை, டிச. 27 –

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் 357 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அந்தவகையில், சென்னை மாவட்டத்தில் 14 பேருக்கும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 திருவாரூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தலா 2 பேருக்கும், திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவருக்கும் என 29 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. மேலும், சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 132 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல, தமிழ்நாட்டில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

மேற்கண்ட தகவல் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.12.2023) முகாம் அலுவலகத்தில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

### நெல்லை மாவட்டத்தில் பெருமழை - வெள்ளத்தில்

## பாதிக்கப்பட்ட பாலங்கள், சாலைகள்: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

### சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்!

நெல்லை, டிச. 27 -

திருநெல்வேலி மாவட்டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கனமழையினால் சேதமடைந்த கருப்பந்துறை ஆற்றுப் பாலம் சீரமைக்கும் பணிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி ஆற்றின் பாலம் மற்றும் பாளையங்கோட்டையில் இருந்து சீவலப்பேரி செல்லும் சாலையில் இரு புறங்களிலும் அரிப்பு ஏற்பட்டுள்ளதையும், பார்வியைிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

உடன் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர். மனோகரன் உடனிருந்தனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

மிகவும் கன மழை காரணமாக 5 தென்மாவட்டங்கள் இயற்கை சீற்றத்தின் காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 இடங்கள், விருதுநகர் மாவட்டத்தில் 13 இடங்கள், தென்காசி மாவட்டத்தில் 13 இடங்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 113 இடங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களில் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்து நிறுத்தம் செய்யும் அளவுக்கு மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. இதில் சாலைகள் மற்றும் ஆற்று பாலங்கள் தண்ணீரில் மூழ்கி மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் போர்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மழை வெள்ளத்தின் காரணமாக மாவட்டத்தில் பல குளங்கள் உடைப்புகள் ஏற்பட்டுள்ளது. சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு விரைவாக சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளங்கள் உடைப்புகளை நீர்வளத்துறையின் மூலம் சரிசெய்யப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 44 இடங்களில் நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலைகள் சரி செய்யப்பட்டு தற்போது போக்கு வரத்து நடைபெற்று கொண்டிருக்கின்றது. அதில் ஒரு இடமான கருப்பந்துறை பாலம். இந்த தரை பாலம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இது பாளையங் கோட்டை பகுதியும் மேலப்பாளையம் பகுதியும் இணைக்கின்ற பாலமாகும். இப்போது தற்காலிகமாக 40 மீட்டர் நீளமும் 1.20 மீட்டு உயரத்திற்கு கான்கீரிட் சுவர் அமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள தரைபாலங்கள் 1127 யும் உயர் மட்ட பாலங்களாக மாற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அந்த உத்தரவிற்கிணங்க தரைமட்ட பாலங்கள் படி படியாக உயர்மட்ட பாலங்களாக கட்டி வருகின்றோம். இந்த ஆண்டு கருப்பந்துறை பாலத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இந்த பாலத்திற்கான டிசைனிங் வேலைகள் துறையின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பின் ஒப்பந்தபுள்ளி விடப்பட்டு உயர் மட்ட பாலம் விரைவில் கட்டப்படும். உயர்மட்ட பாலம் கட்டப்பட்டால் மழை வெள்ளத்தால் இது போன்ற போக்குவரத்து பாதிப்புகள் இந்த பகுதி மக்களுக்கு வராது. அதை போல் குடிநீர் குழாய் கொண்டு செல்வதற்கும் ஒரு பாலம் கட்டப்பட உள்ளது. தற்போது குடிநீர் குழாய் இந்த தரை பாலத்தில் கொண்டு செல்ல தற்காலிகமாக நெடுஞ்சாலைத் துறை மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்த பாலத்திற்கும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு கட்டப்படும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜீ அவர்கள், தலைமை பொறியாளர் சந்திரசேகர் (நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டுமானம்), கோட்டப் பொறியாளர் முத்துக்குமார், உதவி கோட்டப்பொறியாளர் சண்முகநாதன், உதவி பொறியாளர் ராஜேந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

### கடந்த இரண்டு ஆண்டுகளில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகளை மக்களிடம் எடுத்துரைப்போம்!

### கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தல்!

நாமக்கல், டிச. 27 -

நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. நாமக்கல் தெற்கு நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த் வரவேற்றார்.

நாமக்கல் எம்.எல்.ஏ. ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், கிழக்கு நகரச் செயலாளர் செ.பூபதி, மேற்கு நகரச் செயலாளர் அ.சிவக்குமார், நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமைதாங்கி பேசியதாவது,

நாமக்கல் நகரில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் செய்யப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையம், புதிய புறவழிச்சாலை, புதிய ஆவின் பால்பண்ணை போன்றவை கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும் விரைவில் நாமக்கல்லில் அமைக்கப்படும். நகரப் பகுதி மட்டுமல்லாது கிராமப்பகுதிகளிலும் சாலை வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளது. வரும் 2024 ல் நாடாளுமன்ற தேர்தல் வர உள்ளது. நாம் நகரில் செய்துள்ள பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். பல்வேறு மக்கள் நலப் பணிகள் செய்துள்ளதால், நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மக்களை சந்தித்து நாம் என்ன செய்துள்ளோம் என்பதை சொல்லும் ஆற்றல் ஒவ்வொரு தி.மு.க.வினருக்கும் இருக்கிறது.

நாமக்கல் நகராட்சி விரைவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது. அப்போது, நகரம் விரிவாக்கம் செய்யப்படும். நாமக்கல் நகர தி.மு.க.விற்கென தனியாக அலுவலகம் இல்லை. இதனால், கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நகரங்கள் தனித்தனியே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. நாமக்கல் நகர தி.மு.க.வுக்கு சொந்த கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும். நாமக்கல் நகரில் உள்ள வார்டுகளில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து நகர்மன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர், நகரச் செயலாளர்கள் ஆலோசித்து அந்த பணிகளை விரைவாக செய்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இராஜேஸ்குமார் எம்.பி. பேசினார்.

கூட்டத்தில் நாமக்கல் நகர தி.மு.க.விற்கென தனியாக அலுவலகம் இல்லை. இதனால், நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நகரங்கள் தனித் தனியே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறும்போது தனியாக கூட்டம் நடத்த இடமில்லை. ஏற்கெனவே, மாவட்ட செயலாளராக இருந்த கே.கே.வீரப்பன், நாமக்கல் கோட்டை பகுதியில் உள்ள திருப்பாக்குளத் தெருவில் பழைய சர்வே எண் 355/222 என்ற இடம் வாங்கப் பட்டது. மொத்தம் 2,384 சதுர அடி கொண்ட அந்த நிலம் தற்போது செ.காந்திச்செல்வன், செ.மோகன்குமார், செ.வளர்மதி, செ.சுரேஷ் ஆகியோரது பெயரில் உள்ளது. அந்த இடம் இன்னும் பொதுச் செயலாளர் பெயருக்கு மாற்றம் செய்யப் படவில்லை. அதனால் அந்த இடத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. மாவட்ட திமுக சார்பில் அதற்கான முயற்சி எடுத்து அந்த இடத்தை பொதுச்செயலாளர் பெயரில் பத்திரப்பதிவு செய்து அங்கு ஒருங்கிணைந்த நாமக்கல் நகர தி.மு.க. அலுவலகம் கட்ட மாவட்டச் செயலாளர் அனுமதி பெற்றுத் தர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரத்தில் பரமத்தி சாலையில் செலம்பகவுண்டர் பூங்கா அருகில் முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவச்சிலை அமைக்கவும், நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் புதிய பேருந்து நிலையம் அமையவும், நாமக்கல் நகர புறவழிச்சாலை அமையவும், நாமக்கல் நகரின் புதிய சந்தை வணிக வளாகம் அமையவும், அனுமதி வழங்கிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், எ.வ.வேலு, டாக்டர். மா.மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோருக்கு நாமக்கல் மக்களின் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்வது,

தொடர்ந்து பெய்து வந்த மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்ட மக்களுக்கு தேவையான மீட்பு பணிகளை மேற்கொண்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் ப.ராணி, இரா.நக்கீரன், ராஜகோபால், சி.விஸ்வநாத், மருத்துவர் தீபக் குமார், கிருபாகரன், நாசர் பாஷா, சுரேஷ்குமார், முரளி, ராஜவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக நகர துணைச் செயலாளர் புவனேஸ்வரன் நன்றி கூறினார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு நடைபெறும் திடலை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று பார்வையிட்டார், உடன் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் எல்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, தியாகராஜன், திருச்சி மேயர் அன்பழகன், மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாரப்பட்டி சுரேஷ் குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாநில தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் தமிழ்செல்வன், சோமசுந்தரம், முத்துலிங்கம், ராஜா, சந்திரமோகன், நகரச் செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், ஒன்றியச் செயலாளர்கள் வெள்ளாளப்பட்டி மூர்த்தி, அன்பு, சிவராமன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், அழகுவேல், மணி, பாலமுருகன், ரத்தினவேல், சித்தார்த்தன், மாவட்ட அமைப்பாளர்கள் முனைவர் சீனிவாசன், ரமேஷ், தனசேகரன், திருநாவுக்கரசு, பேரூர்ச் செயலாளர்கள் வெங்கடேசன், பிசி செல்வம், சுப்பிரமணியன், பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பழனிசாமி, கலைச்செல்வன், தனபால், பன்னீர்செல்வம், கோபி, வீரேந்திர துரை சுப்பிரமணி, அப்பாதுரை, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அன்பழகன், ராஜா, ஜெயசெல்வி பாலாஜி, பழனியம்மாள் ராசா மணி, கவிதா சக்கரவர்த்தி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் பாரதி, தாடி வெங்கடேஸ்வரன், ஆறுமுகம், மாதேஸ்வரி மாது, அசலாம்பு பூபதி, காசிலிங்கம், கலா பெரியசாமி, நகர தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் மகேஸ்வரன், பிரசாந்த், கிளைச் செயலாளர்கள் குழந்தைவேல், சங்கர், சி.எம்.ஆறுமுகம் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (25.12.2023) நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழை வெள்ளத்தினால் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும், கால்நடைகளை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் ரூ.58.14 இலட்சம் மதிப்பிலான நிவாரணத் தொகையினை 21 நபர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ., திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மாநகராட்சி ஆணையர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், துணை மேயர் கே.ஆர்.ராஜு உட்பட பலர் உள்ளனர்.

### வெள்ளம்: நள்ளிரவில் வீடு வீடாகச் சென்று அதிகாரிகள் எச்சரித்ததால்

# திருவைகுண்டத்தில் 2400 பேர் மீட்பு!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி!

சென்னை, டிச. 27-

நள்ளிரவில் அரசு அதிகாரிகளும் காவல் துறையினரும் வீடு வீடாகச் சென்று எச்சரித்ததால் 2400க்கும் மேற்பட்டோர் கடும் வெள்ள பாதிப்பிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளனர்.

இதுகுறித்து ‘தி இந்து’ நாளேட்டில் வெளியான செய்தி வருமாறு:-

கடந்த (சனிக்கிழமை) 17-ஆம் தேதி இரவு தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் வரப்போகிறது; கரையோர மக்களை உடனே வெளியேற்றுங்கள் என்ற அபாய எச்சரிக்கையை திருவைகுண்டம் தாலுக்கா அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் கொண்டு செயல்படத் தொடங்கினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் திருவைகுண்டமும் ஒன்றாகும். கடுமையான மழை பெய்த நிலையிலும் நள்ளிரவு என்றும் பாராது வருவாய்த்துறை அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டதன் காரணமாக உயிரிழப்பு என்பது மிகவும் குறைவாகவே இருந்தது.

மழை தொடர்பான இந்தச் சம்பவத்தில் 2400 பேர் காப்பாற்றப்பட்டு 2 பேர் மட்டுமே இறந்துள்ளனர். ‘தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் ஏற்படப் போகிறது’ என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதியிடமிருந்து எங்களுக்கு எச்சரிக்கை வந்தவுடன், எங்கள் அதிகாரிகள் 22 கி.மீ. நீளமான கரையோரமுள்ள கிராமங்களுக்கு - அதிலும் குறிப்பாக 500 மீட்டருக்கும் குறைவான பகுதியிலுள்ள சிறு சிறு குக்கிராமங்களுக்கும் நள்ளிரவு என்றும் பாராமல் அங்குள்ள மக்களை வெளியேற்றியதாக திருவைகுண்டம் தாசில்தார் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

காவல்துறை அதிகாரிகளின் உதவியுடன், மண்டல போக்குவரத்துத்துறை அதிகாரிகளின் வாகனங்களில் வீடு வீடாகச் சென்று கதவை தட்டி அங்குள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்தோம். சிறிதும் கால தாமதம் செய்யாமல், ஒரு லட்சம் கன அடி அளவிற்கு தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் வர உள்ளதால் பெரு வெள்ளத்திற்கு வாய்ப்புள்ளது; உடனே எழுந்து வந்து விடுங்கள் என்று எச்சரித்தோம். ஒரு சில இடங்களில் உள்ள மக்கள் எங்கள் பேச்சைக் கேட்டு உடனடியாக தங்களது வாகனங்கள் மூலம் வெளியேறிவிட்டனர். வேறு சில இடங்களில் வெளியேற மறுத்தனர். எங்களது அதிகாரிகள், ஒத்துழைப்பு நல்குமாறு அவர்களை கெஞ்சினர். இன்னும் ஓரிரு மணியில் தொலை தொடர்பும் துண்டிக்க வாய்ப்பு உள்ளது, என்று மன்றாடியதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தா.

ஏறத்தாழ 2400 பேரை அதிகாரிகள் மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர். தாழ்வான இடங்களில் இருந்து பாதுகாப்பான இடத்திற்கு அவர்கள் மீட்கப்பட அதிகாரிகள் கால தாமதம் செய்யாமல் உடனடியாக செயல்பட்டதை குறிப்பிட்டாக வேண்டும்.

அணைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தண்ணீருடன் நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழையும் சேர்ந்து தாமிரபரணி ஆற்றில் ஒரு லட்சம் கன அடி என்கிற அளவிற்கு வெள்ளம் கரை புரண்டு ஓடியது. திங்கள் காலை 6 மணி வரை 24 மணி நேரத்தில் திருவைகுண்டம் தாலுக்காவில் மட்டும் 618 மில்லி மீட்டர் மழை பெய்தது.

அது மட்டுமின்றி, சென்னை நோக்கிச் செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயில், கடும் வெள்ளம் காரணமாக திருவைகுண்டம் ரெயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், அதில் பயணம் செய்த 250 ரெயில் பயணிகளை விரைந்து செயல்பட்டு மீட்டனர். தொலை தொடர்பு துண்டிக்கப்பட்ட காலை 2.30 மணி வரை செயல்பட்ட மீட்புப் பணி அதன் பிறகு தொடர முடியவில்லை.

மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்ட நிலையிலும் திருவைகுண்டம் தாலுக்காவில் 2 உயிர்கள் மட்டுமே பலியானதாக தாசில்தார் தெரிவித்தார்.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# அன்னவாசல் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் - சேலம் சுஜாதா சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச.27-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, சேலம் இளைஞரணி மாநாடு அழைப்பு விடுத்து மாபெரும் பொதுக்கூட்டம்

இன்று (27.12.2023 புதன் கிழமை) மலைக்குடிப்பட்டியில் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.மாரிமுத்து தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன் வரவேற்புரையிலும் நடைபெறுகிறது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். மாநில பிரச்சாரக் குழுச் செயலாளர் சேலம் சுஜாதா, சொற்பொழிவாளர் சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

கே.ஆர்.என்.போஸ், எம்.செந்தில்குமார், டி.ஆர். ஆர்.ரெங்கராஜ், கீரை.தமிழ் ராஜா, வை.விஜயகுமார், பூங்குடி எம்.சிவக்குமார், கா. இளவரசன், பொன்.பாரி வள்ளல், கே.எஸ்.ச.இளைய சூரியன், பி.மாரிமுத்து, பி.வி.எஸ்.பாண்டியராஜா, கார்த்திக், பாக்கியராஜ், வனிதா போஸ், ஆர்.விஜயக்குமார், என்.எஸ்.பன்னீர் செல்வம், சிஆர்.கே.மதியழகன், ஜி.மாதவி, எம்.கல்யாணி, இராஜேஸ்வரி.செந்தில்குமார், கை.பழனிச்சாமி பொன்.தீத்தப்பன், பி.இராசப்பன், ஏ.கண்ணதாசன், டி.கணேசன், எம்.பி.எல். சின்னத்தம்பி, பி.எம்.சி. ஜெயராமன், கே.ஆர் பி. ஜெயச்சந்திரன், மருதாந்தலை செல்வகுமார், இராஜேந்திரன், ராமச்சந்திரன், சுப்பிரமணியன், ரவி சண்முகம், கே.ஆர்.ஜி.வேலுச்சாமி, எம்.வேலு, வி.சி. பரஞ்சோதி, டி.சுப்பிரமணியன், ரவி, டி.சண்முகம், ஆர்.குமாரசாமி, சி.ராமச்சந்திரன் கே.சண்முகம், உ. என்.சுப்பையா, ஆர்.ஆர். எஸ்.எம்.சுரேந்தர், ஜி.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி, பெரியண்ணன் அரசு, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. கவிச்சுடர் கவிதைபித்தன் , பி.டி.அரசக்குமார், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா. அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, செ.அசோக் பாண்டியன், ஆ.செந்தில், அரு.வீரமணி, கே.எஸ்.சந்திரன், சுப.சரவணன், எஸ். எஸ்.கருப்பையா, பெ. ராஜேஸ்வரி, க.மதியழகன், எம்.லியாகத் அலி, சு.சண்முகம், எம்.எம்.பாலு, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், என்.சாத்தையா, சி.ஆர். வி.சித்ரா, முல்லை முபாரக், ஆர்.செல்லத்துரை, இராசு. சந்தோஷ், எஸ்.வி.ஆர். ஸ்டாலின்ராஜா, கலைஞர் கருணாநிதி, அன்சாரி, இளஞ்சேரன் முத்துச்சாமி, ஸ்டாலின் நாராயணசாமி, இ.செந்தில்ராஜா, சுந்தர்ராஜன், எம்.கோவிந்தராஜன், செல்லம் அசோக்குமர், வள்ளிக்க ்ண்ணு பழனிச்சாமி, மீனா பாண்டியன், பாட்ஷா, ஏ.பி.ஆர். ராஜாங்கம், கே.ஜி.எஸ்.சுகுமாரன், சிவசுப்பிரமணியன், சுரேஷ் குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்

எம்.பி..தங்கவேல் நன்றி கூறுகிறார்.

# முரசொலி விநியோகப்பிரிவில் பணிபுரிந்து வந்த திருவண்ணாமலை என்.கண்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.27-

‘முரசொலி’ விநியோகப்பிரிவில் பணி புரிந்த என்.கண்ணன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “முரசொலியில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் சுமார் 12 ஆண்டு காலமாக விநியோகப்பிரிவில் பணிபுரிந்து வந்த என்.கண்ணன் அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் (25.12.2023) மறைவுற்றார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

முரசொலி விநியோகப் பிரிவில் திறம்பட பணியாற்றியவர். இன்முகத்துடன் அலுவலகத்தில் அனைவருடன் பழகி, மிகுந்த சுறுசுறுப்புடன் செயலாற்றி வந்தவர்.

உடல் நலிவுற்று கடந்த ஒரு சில மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என அறிந்து மிகுந்த துயருற்றேன்.

அவரது பிரிவால் வாடும் முரசொலி அலுவலர்கள், ஊழியர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்”.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### முரசொலி விநியோகப் பிரிவில் பணிபுரிந்த

# திருவண்ணாமலை என்.கண்ணன் மறைவு!

## கழகத்தினர் - நண்பர்கள் அஞ்சலி!



சென்னை, டிச. 27-

முரசொலி நாளிதழில் விநியோகப் பிரிவில் கடந்த 2011 முதல் பணியாற்றி வந்த திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றிய மாணவர் அணி முன்னாள் அமைப்பாளரும், கலசப்பாக்கம், மேட்டுப்பாளையம் நியாதிபதி சாமுண்டீஸ்வரி ஆகியோரின் மூத்த புதல்வருமான என்.கண்ணன் நேற்று முன்தினம் (25.12.2023 திங்கட்கிழமை) இரவு 8 மணி அளவில் உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவலறிந்து அன்னாரது உடலுக்கு கழகத்தினர், நண்பர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு க.சீத்தல் என்ற ஒரு மகளும், என். சுதாகர், என்.ராஜா என இரு சகோதரர்களும், என். பத்மா என்ற தங்கையும் உள்ளனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று அவரது சொந்த ஊரான எண். 153, பெரிய தெரு, மேட்டுப் பாளையம், கலசபாக்கம் வட்டம், திருவண்ணாமலை எனும் முகவரியில் இருந்து புறப்பட்டு மேட்டுப்பாளையத்தில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

### ஆட்சியர் ச.உமா! ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ, - எஸ்.எம்.மதுராசெந்தில் பங்கேற்பு

# திருச்செங்கோட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், டிச. 26 -

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு பட்டா வழங்கும் முகாமில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், நகர மைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம். மதுராசெந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசியதாவது:- முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இதுவரை இல்லாத அளவிற்கு அனைத்து தரப்பு மக்களும் உதவிபெறும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக கொண்டு வரப்படாத திட்டங்கள் அனைத்தும் இந்த இரண்டரை ஆண்டுகளில் செயல்படுத்தி உள்ளார் என அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நாமக்கல் மாவட்டதில் இரத்த சோகை இல்லாத கிராமம் குறித்த சிறப்பு பிரச்சாரம், சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா குறித்து நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிப் பெற்ற 8 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.23,500 மதிப்பில் பரிசு தொகை மற்றும் முகாமில் நாமக்கல் கோட்டத்தில் ரூ.11.80 கோடி மதிப்பீட்டில் 1,616 பயனாளிகளுக்கும், திருச்செங்கோடு கோட்டத்தில் ரூ. 13.18 கோடி மதிப்பீட்டில் 1,381 பயனாளிகளுக்கும் என மொத்தம் ரூ. 24.98 கோடி மதிப்பீட்டில் 2,997 பயனாளிகளுக்கு இன்றைய தினம் பட்டாவை அமைச்சர் மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவர் ரெ.சுமன், சே.சுகந்தி, பிரபாகரன், மா.பிரியா, ம. சுஜாதா, ராஜவேல் (எ) ராஜ பாண்டி உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும் ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம். ராஜேந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (25.12.2023) சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.



திருச்சி தெற்கு மாவட்டச் கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் பேரில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு தினத்தை அடுத்து அவரது சிலைக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் செங்குட்டுவன், லீலாவேலு, சந்திரமோகன், செல்லையா, நூர்கான், செந்தில், கார்த்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், ராஜ்முகமது, மோகன், மணிவேல், பாபு, சிவக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன், ராஜேந்திரன், செல்வம் உள்ளிட்ட பகுதி, ஒன்றிய,நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்டஅணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நேற்று முன்தினம்ள(25.12.2023), இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்.உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்.எ.வ.வேலு, ஆகியோர் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். இந்த நிகழ்வின் போது, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, சட்டப்பேரவைத் தலைவர் எம்.அப்பாவு மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் .கே.பி.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட அதிகாரிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முன்னாள் ஒடிசா மாநில ஆளுநர் – மறைந்த

# எம்.எம்.ராஜேந்திரனுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 27 -

முன்னாள் ஒடிசா மாநில ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன் அவர்களுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு:-

ஒடிசா மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், பெருந்தலைவர் காமராஜர், தமிழினத் தலைவர் கலைஞர் உள்ளிட்ட முதலமைச்சர்களுடன் பணியாற்றிய வரும், தமிழ்நாட்டின் முன்னாள் தலைமைச் செயலாளருமான எம்.எம். ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

1957ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் தனது பணியைத் தொடங்கி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் ஆட்சித் தலைவராகவும், ஒன்றிய அரசின் செயலாளராகவும், தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராகவும் பணியாற்றி இந்திய ஆட்சிப் பணியில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து, ஓய்வுக்குப் பிறகும் ஒடிசா மாநில ஆளுநராக செவ்வனே மக்கள் பணியாற்றியவர் திரு. எம்.எம். ராஜேந்திரன் அவர்கள்.

உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்று வந்த அண்ணாரின் மறைவு ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எம். ராஜேந்திரன் அவர்களின் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

மா. சுப்பிரமணியன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அவரது சேவைகளைப் போற்றும் வகையில், காவல்துறை மரியாதையுடன் இறுதி நிகழ்வு நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டு மக்களுக்கு

# எதிராக அப்பட்டமாக செயல்படுகிறார் அமைச்சர் நிர்மலா சீதாராமன்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!



சென்னை, டிச. 27 -

“வாயை வைத்துக் கொண்டு பொறுமையாய் இருப்பது நல்லது” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆலோசனை கூறியுள்ளார். ஆனால் இந்த ஆலோசனையை கூறும் நிர்மலா சீதாராமன் அவருடைய வார்த்தைகள் எப்படி இருந்தன? என்பதை அவர் பேட்டியை பார்த்தவர்கள் அறிவார்கள். பேட்டியின் பொழுது அவரது முகம் கோபத்தில் கொப்பளித்ததை பார்க்க முடிந்தது. ஒரு மாநில அரசு, கடும் நெருக்கடியான நேரத்தில் இருக்கும் போது உதவுவதற்கு கோரிக்கை வைக்கிற பொழுது அது முடியாது என்று கூறுவதற்கு ஒரு பேட்டி; அதுவும் அவருடைய ஒவ்வொரு வார்த்தைகளும் ஆணவத்தின் வெளிப்பாடாக அமைந்திருந்தது. ஒன்றிய நிதி யமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் தமிழ்நாட்டுக்குத் துரோகமான இந்த செயலை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் கடந்த டிசம்பர் 4 ஆம் நாள் பெய்த கடும் மழையால் சென்னை மாநகரம் தத்தளித்தது. தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அரசின் போர்க்கால நடவடிக்கையால் விரைவில் வெள்ளைச் சூழலில் இருந்து மக்கள் மீண்டனர். ஆனாலும் பாதிப்புகள் பெருமளவு ஏற்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி போன்ற மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18 தேதிகளில் வரலாறு காணாத கடுமழை பெய்து, அந்த மாவட்டங்களை சின்னாபின்னமாக் கிணியுள்ளது. மனித உயர் இழப்புகள், கால்நடைகள் இழப்பு, சாலைகள் துண்டிப்பு, வீடுகள் இடிந்து விழுந்தது, விவசாயப் பயிர்கள் பெரும் நாசம் என வரலாறு காணாத பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் மீட்பு பணியை மேற்கொள்ள அமைச்சர்களை விரைந்து அனுப்பியதோடு, தொடர்ந்து அதிகாரிகளோடும் அமைச்சர்களோடும் இணைய வழியாக தொடர்பு கொண்டும் தான் நேரில் சென்றும் மீட்புப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் விரைவு படுத்தி வந்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் சென்னைப் பகுதியில் 50 ஆண்டுகாலம் இல்லாத அளவும், தென் மாவட்டகளில் 100 ஆண்டு காலம் இல்லாத அளவும் பெய்த பேய் மழையால் ஏற்பட்ட இந்த வரலாறு காணாத பெரும் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்றும், ரூபாய் 21,600 கோடி நிவாரண பணிக்கு நிதி ஒதுக்கிட வேண்டும் என்றும் பிரதமரிடம் முதலமைச்சராக அவர்கள் நேரில் கோரிக்கை வைத்துள்ளார்கள். பிரதமரும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

இந்த நிலையில் ஒன்றிய அரசிடம் மாநில அரசு நிதி கேட்டால், ஒன்றிய அரசு என்ன ஏ.டி.எம் ஆ? என ஒன்றிய அமைச்சர் கேட்டதற்கு, அமைச்சர் உதயநிதி அவர்கள், நாங்கள் அவர்கள் சொந்த அப்பாவின் பணத்தை கேட்கவில்லை, மாநில அரசு வழங்கிய வரிப்பணத்தில் இருந்து தான் கேட்கிறோம் என்று கூறியதற்கு; அப்பன் வீட்டு பணமா என்றெல்லாம் அமைச்சர் உதயநிதி வாயை விடுவது நல்லதல்ல என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுரையை ஆவேசமாக வழங்குகிறார். பிறருக்கு அறிவுரை சொல்வதற்கு முன்பு தான் அதற்கு தகுதியானவராக நடந்து கொள்ள வேண்டும். அப்படி அந்த பேட்டியில் நிர்மலா சீதாராமன் நடந்து கொள்ளவில்லை என்பது வெட்கக்கேடானது.

முதலமைச்சர் வெள்ள பகுதிகளில் இல்லாமல் இந்தியா கூட்டணி கூட்டத்தில் கலந்து கொள்ள டெல்லி வந்ததாகவும், அந்த வாக்கில் பிரதமரை சந்தித்ததாகவும் கூறுகிறார். இந்தியா கூட்டணி கூட்டம் என்பது ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று. வெள்ளத்தால் குறிப்பிட்ட பகுதியில் ஏற்பட்ட கேடுகள் மிக மோசம். அதைவிட ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகார செயல்களால் ஜனநாயகத்திற்கு மாபெரும் கேடு ஏற்பட்டுள்ளது. அந்த கேடையையும் களைய வேண்டிய கடமை ஜனநாயக நம்பிக்கை உள்ள அனைத்துத் தலைவர்களுக்கும் உண்டு. அந்த அடிப்படையில் டெல்லிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் வந்தார். ஆனால் அதற்கு முன்னரே பிரதமரிடம் சந்திப்பதற்கு நேரம் கேட்டு, அவர் கொடுத்த நேரத்தில்தான் முதலமைச்சர் பிரதமரை சந்தித்துள்ளார்.

ஆனால் இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு அற்ப அரசியலுக்கு அப்பட்டமாக நிர்மலா சீதாராமன் பேசியிருப்பது வெட்கக்கேடானது, வேதனையானது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் அமைச்சரான பிறகு, மாநிலத்தின் நலனை கருத்தில் கொள்ளாமல், அடாவடித்தனமாக தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக நிர்மலா சீதாராமன் பேசுகிறார். ஒட்டு மொத்தத்தில் தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அப்பட்டமாக எதிராக செயல்படும் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என பொன்குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பேரூராட்சி, ராஜசங்கீதா திருமண மண்டபத்தில், ”மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, பேரூராட்சித் தலைவர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், அட்மா கமிட்டித் தலைவர் முத்துகிருஷ்ணன், பேரூராட்சி துணைத்தலைவர் நைனா முகமது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டத்தில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, தொடர் கன மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் உயிரிழந்த 22 பேரின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, தலா ரூ. 5 லட்சத்திற்கான நிவாரணத் தொகையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, அதேபோல, வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் 16 பேருக்கு தலா ரூ. 10 ஆயிரத்திற்கான நிவாரணத் தொகை வழங்கினார். இந்நிகழ்வின்போது, கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி, ஆர்.காந்தி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் வாய்க்காலிலிருந்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி, செயற்பொறியாளர் (கீழ்பவானி வடிவில் கோட்டம்) திருமூர்த்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தூத்துக்குடியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# ஆ.முருகன் குடும்பத்திற்கு ஆறுதல் - ரூ.5 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.27-

தூத்துக்குடி மாவட்டம் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், தூத்துக்குடி பகுதி1 கிராமம், அம்பேத்கார் நகர் மூன்றாவது தெருவைச் சேர்ந்த ஆ.முருகன் (வயது 45), த/பெ. ஆத்திக்கண்ணு என்பவர் (24.12.2023) அன்று கனமழையினால் சேதமடைந்த கிருஷ்ணராஜபுரம், ஐந்தாவது தெருவில் உள்ள மின்கம்பத்தினை பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக்குழு ஆய்வு!

## தமிழ்நாடு அரசின் திட்டப்பணிகள் திருப்தி அளிப்பதாக தகவல்!

பெரம்பலூர், டிச.27-

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதி மொழிக்குழு நேற்று முன்தினம் ஆய்வு செய்தது. அதன்படி அக்குழுவின் தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன் தலைமையில், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணாதுரை, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

பெரம்பலூர் ஆத்தூர் சாலையில் கோனேரிப்பாளையம் அருகே கோனேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணையை ஆய்வு செய்து அதன் மூலம் பயன்பெறும் விளை நிலங்கள் குறித்து கேட்டறிந்தனர். அதனைத்தொடர்ந்து வேப்பந்தட்டை அரசு கலைக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத்துறை சார்பில் 100 மாணவர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள விடுதியை ஆய்வு செய்து அதன் தரம் குறித்தும் மாணவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டறிந்தனர். அடுத்ததாக எறையூர் சர்க்கரை ஆலையில் முடிவுற்ற பணிகளை பார்வையிட்டு, கரும்பு அறவைத் திறன், பதிவு செய்துள்ள விவசாயிகள், இந்த ஆண்டிற்கான இலக்கு உள்ளிட்ட விவரங்களை கேட்டு அறிந்து, தேங்கியுள்ள பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டனர்.

தொடர்ந்து எறையூர் சிப்காட் தொழில் பேட்டையில் செயல்பட்டு வரும் கோத்தாரி காலனி பூங்காவினை பார்வையிட்ட, இந்த குழு பெரம்பலூர் எளம்பலூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள குற்ற பிரிவு குற்ற புலனாய்வுத்துறை அலுவலக கட்டிடத்தையும், பெரம்பலூர் பெண்கள் அரசு உயர்நிலை பள்ளியில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தையும், பெரம்பலூர் திருச்சி சாலையில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்தின் கட்டுமான பணிகளையும் பார்வையிட்டு, அதன் தரம் குறித்தும் உறுதி தன்மை குறித்தும் ஆய்வு செய்தனர்.

இதுமட்டுமின்றி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஆய்வு செய்த சட்டப்பேரவை உறுதிமொழி குழு, அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு சிகிச்சையின் தரம் குறித்தும், அங்குள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தனர். மேலும் மருத்துவமனை வளாகத்தை சுற்றிப் பார்த்த குழுவினர் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்ட வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

மேலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழி குழுஆய்வு குழுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் பிறகு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

பெரம்பலூர் மாவட்டத்தில் எட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் ஆய்வு செய்துள்ளதாகவும், தமிழக அரசு சிறப்பாக பணிகளை மேற்கொள்வதாகவும்,

மாவட்ட ஆட்சியர் தலைமையின் சிறப்பான முறையில் பணிகள் நடந்து வருவதாகவும், அதற்காக பாராட்டுக்களையும் குழுவின் சார்பாக தெரிவிப்பதாக வேல்முருகன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சீனிவாசன், இணைச் செயலாளர் கருணாநிதி, துணைச் செயலாளர் ரவி, மாவட்ட ஆட்சியர் கற்பகம், சிறைத்துறை துணைத் தலைவர் ஜெயபாரதி பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.




தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டைக்கு மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை தலைமையில் லாரியில் அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேராவூரணி நா.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாவட்டப் பொருளாளர் அஸ்லாம், கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 5 டன் அரிசி 5 கிலோ பையாக பிரிக்கப்பட்டு, மொத்தம் ஆயிரத்து 100 பைகள், போர்வை, கைலி, வேட்டி ஆகியவற்றுடன் பிஸ்கட், 520 ரூபாய் மதிப்பு உள்ள மளிகை பொருட்கள் 300 பைகளாகவும், மற்றும் பால் பவுடர் ஆகிய நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டது.

# பேரிடரையும் புறக்கணிக்கும் பேரரசா ஒன்றிய அரசு?

**வெ**ந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது என்று சொலவடையாகக் கூறுவார்கள். தமிழ்நாடு சந்தித்த கடும் இயற்கைப் பேரிடர்களுக்கான கூடுதல் நிவாரண நிதி கோரிக்கை குறித்து ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய ஆணவப்பேச்சு அனைத்துத் தரப்பினரையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மக்களைக் குறித்து எந்த கவலையும் இல்லாத, கருணையும் இல்லாத ஒன்றிய நிதியமைச்சரின் பேச்சு ஆட்சியாளர்களின் மமதை எந்த அளவு செல்லும் என்பதையே காட்டுகிறது. இத்தனைக்கும் அவர் தப்பும், தவறுமாகப் பேசினாலும், தமிழிலேயே பேசியதுதான் மக்களின் வேதனை அதிகரிக்கக் காரணம்.

வரலாறு காணாத, வானிலை ஆய்வுகளின் கணிப்புகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட கடும் மழைப்பொழிவுகள் தலைநகர் சென்னையையும், அதை அடுத்து தென் மாவட்டங்களையும் நிலைகுலையச் செய்துள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும், அயரா களப்பணியாலும் மக்களை ஒட்டுமொத்த பாதிப்பிலிருந்து கூடியவரை காத்துள்ளது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாட்டு அரசாங்கம். ஆனாலும் இயற்கைப் பெருஞ்சீற்றம் மக்களின் வாழ்வினை சீர்குலைத் துள்ளது.

வழமையான பருவ கால மழை, வெள்ளம், புயலைத் தாண்டிய இந்த கடும் பேரிடரின் தாக்கத்தை எதிர்கொண்டு மீட்பு பணி செய்ய கூடுதல் நிவாரண நிதி கேட்டு ஒன்றிய அரசை அணுகியது தமிழ்நாடு அரசு. உடனடியாக 2,000 கோடி ரூபாயை தேசிய பேரிடர் நிதியிலிருந்து இடைக்கால நிவாரணமாக ஒதுக்கச் சொல்லி கோரியது.

இது தேசிய பேரிடர் நிவாரண நிதி உருவாக்கப்பட்டதற்கான மூலகாரணத்தை ஒட்டிய கோரிக்கையாகும். இது விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதோ, தேசிய பேரிடர் நிதியின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதோ அல்ல. அந்த நிதியின் நோக்கமே வழக்கத்தை விட கடுமையான இயற்கைச் சீற்றங்களை மாநிலங்கள் சமாளிக்க கூடுதல் நிதியைத் தருவதுதான்.

**பிறகு எந்த காரணத்தால் ஒன்றிய நிதியமைச்சர் கடும் சொற்களைப் பேச வேண்டும்? ஏன் அமைச்சர் உதயநிதி அமைச்சரின் மரியாதைக்குரிய அப்பா வீட்டு சொத்தை கேட்கவில்லை என்று காட்டமாகச் சொல்ல நேர்கிறது? ஏன் தினமலர் நாளிதழ் உதயநிதி காசுக்காக நிர்மலா சீதாராமனிடம் கையேந்துவதாக கேலிச்சித்திரம் வரைகிறது?**

**இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரம். அதனை கூட்டாட்சி குடியரசாக உணரச்செய்யாமல் ஒரு பேரரசாக உணரச் செய்வதுதான் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. இது சாதாரணமாக கூட்டாட்சிகளில் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல் போன்றதல்ல. கூட்டாட்சி தத்துவத்தையே குழிதோண்டிப் புதைக்கக் கூடிய பா.ஜ.க. அரசாங்கத்தின் ஆணவமாகும். பிரச்சினையை விரிவாக அலசுவோம்.**

### தேசியப் பேரிடர் நிதியும், மாநிலப் பேரிடர் நிதியும்

அரசின் எல்லா நிதிகளும் வரி வசூல் மூலமாகவே உருவாகிறது என்பது வெளிப்படையானது. அதாவது மக்களின் வரிப்பணமே அரசின் மூலாதாரம். இந்திய ஒன்றியத்தைப் பொறுத்தவரை வருமான வரி என்பது ஒன்றிய அரசினால் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. விற்பனை வரி விதிப்பு மாநிலங்களிடம் இருந்தது, சமீபத்தில் ஜி.எஸ்.டி. என்ற வடிவில் ஒன்றிய அரசினால் வசூலிக்கப்பட்டு பின்னர் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

எனவே வரி வருவாய் என்பதில் மாநில அரசுகளுக்கென தனியான வரி விதிப்பு வாய்ப்புகள் அதிகம் இல்லை. ஒரு சில அம்சங்கள் மட்டுமே அதன் வருவாய்க்கு வழியாக உள்ளன. மாநில அரசு ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வையே பெருமளவு சார்ந்துள்ளது. ஆனால் வரி செலுத்தும் மக்கள் அனைவரும் வெவ்வேறு மாநிலங்களில்தான் வாழ்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

இந்த நிலையில் இயற்கைச் சீற்றம், பேரிடர்களின் தாக்கத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பது மாநில அரசுகளின் பொறுப்பாகவே உள்ளது. ஒன்றிய அரசு தேசிய பேரிடர் நிதி (National Disaster Response Fund) என்று ஒன்றை செஸ் என்ற கூடுதல் வரிகளை ஒரு சில பொருட்கள் மேல் விதிப்பதால் வசூலிக்கிறது. இந்த நிதிக்கு தனி நபர்களும் நன்கொடை வழங்கலாம். பின்னர் அதன் ஒரு பகுதியை மாநில பேரிடர் நிதி (State Disaster Response Fund) உருவாக்கத்துக்குக் கொடுத்து விடுகிறது. ஒன்றிய அரசு 75%, மாநில அரசு 25% பங்களித்து மாநில பேரிடர் நிதி உருவாக்கப்படுகிறது.



**ஆனால், ஒரு மாநிலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படும் பேரிடரின் கடுமை அதிகமாக இருந்தால் அந்த மாநிலத்தின் பேரிடர் நிதியிலிருந்து மட்டும் அதனால் நிவாரணம் அளிக்க முடியாது. அப்படிப்பட்ட கடுமையான பாதிப்புகள் ஏற்படும்போது மாநிலங்கள் ஒன்றிய அரசிடம் கூடுதல் ஒதுக்கீட்டை தேசிய பேரிடர் நிதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதே இந்த நிதியின் நிர்வாக விதி.**

பேரிடர் நிதி மேலாண்மைக்காக 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் விதி 3.1 தெளிவாக இந்த நோக்கத்தைக் கூறுகிறது.

3.1 Natural Calamities of cyclone, drought, earthquake, fire, flood, tsunami, hailstorm, landslide, avalanche, cloud burst and pest attack considered to be of severe nature by Government of India and requiring expenditure by a State Government in excess of the balances available in its own State Disaster Response Fund (SDRF), will qualify for immediate relief assistance from NDRF.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



**தமிழில்: புயல், பஞ்சம், நிலநடுக்கம், நெருப்பு, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பனிப்பாறைச் சரிவு, மேக உடைப்பு மற்றும் கிருமி தாக்குதல் ஆகிய இயற்கைப் பேரிடர்களின் தன்மையை கடுமையானதாக ஒன்றிய அரசு மதிப்பிடுவதும், மாநில அரசின் வசமுள்ள மாநில பேரிடர் நிதியை விட அதிகமான நிதி நிவாரணத்துக்கு தேவைப்படுவதும், தேசிய பேரிடர் நிதியிலிருந்து உடனடி நிவாரணம் பெறுவதற்கான தகுதிகளாகும்.**

இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்ன? இரு விதங்களில் தேசிய பேரிடர் நிதி, மாநில பேரிடர்களைச் சந்திக்க பகிரப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் முன் தீர்மானிக்கப்பட்ட அளவு நிதி மாநில பேரிடர் நிதிக்கு வழமையான பாதிப்புகளைச் சமாளிக்க தரப்படும் (தமிழ்நாட்டுக்கு இவ்வகையில் வழங்கப்படுவது ரூ.900 கோடி).

மேலதிகமாகக் கடுமையான பாதிப்புகள் ஏற்படும்போது மாநில அரசுகள் மேலதிக நிதியைக் கோரிப்பெறலாம் (தமிழ்நாடு உடனடி இடைக்கால நிவாரண தொகையாகக் கேட்பது ரூ.2,000 கோடி).

### யாரை குழப்புகிறார் நிர்மலா சீதாராமன்?

தமிழ்நாடு மிகக் கடுமையான வெள்ளத்தையும், மழைப்பொழிவையும் சந்தித்துள்ளதால் அதன் நிர்ணயிக்கப்பட்ட மாநில பேரிடர் நிதியான 1,200 கோடி ரூபாய் நிவாரணத்துக்குப் போதாது என்று மதிப்பிட்டு, கிட்டத்தட்ட 12,000 கோடி ரூபாய் நிவாரண உதவிகள் செய்ய தேவைப்படும் என்று கருதுகிறது. அதனால் உடனடி இடைக்கால நிவாரணமாக 2,000 கோடி ரூபாயாவது தேசிய நிதியிலிருந்து விடுவிக்கச் சொல்லி கோருகிறது.

இப்படி தேசிய பேரிடர் நிதியிலிருந்து கூடுதல் பணம் வேண்டுமென்றால் ஒன்றிய அரசு பேரிடரை "கடுமையான பேரிடர்" என்று அங்கீகரிக்க வேண்டுமென்று பார்த்தோம். அதன் பிறகு செலவுகளைச் சமாளிக்க மாநில பேரிடர் நிதி போதாது என்பதையும் ஏற்கும்போதுதான் அது கூடுதல் நிதியைத் தரும்.

இந்த அங்கீகாரத்தைத்தான் "தேசிய பேரிடர்" என்று அறிவிக்க கோருவதாக பொதுவழக்கில் கூறப்படுகிறது. எந்த பேரிடரும் ஒட்டுமொத்த தேசத்தையும் தாக்காது; ஒரு சில மாவட்டங்களைத்தான் பெரிதும் தாக்கும். ஆனால், கூடுதல் நிவாரணத் தொகை தேசிய பேரிடர் நிதியிலிருந்து வருவதால்தான் அதை தேசிய பேரிடர் என்று குறிப்பிடுகிறார்கள்.



**இந்த எளிய உண்மையை திரித்துப் பேசிய ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் "தேசிய பேரிடர்வு" என்று எதையும் அறிவிப்பதில்லை என்று மீண்டும், மீண்டும் சொன்னார். பேரிடர் என்ற வார்த்தையை தவறாகப் "பேரிடர்வு" என்று கூறினாலும், அதை வாய் தவறி சொல்லாமல் பல முறை அழுத்தம் திருத்தமாக "பேரிடர்வு" என்றே கூறினார். உச்சகட்ட மமதை அவர் கூற்றில் வெளிப்பட்டது.**

**சென்னையிலும், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் வீடு வாசலை விட்டு வெளியேறி அகதிகளாக இருக்கும் மக்களின் நிலையை ஒரு நிமிடமாவது எண்ணிப்பார்த்திருந்தால் அவர் இப்படிப் பேசியிருப்பாரா? அவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்?**

"ஒன்றிய அரசு மாநில பேரிடர் நிதிக்குரிய தொகையை முன் கூட்டியே கொடுத்துவிட்டது. கூடுதல் நிதி கொடுப்பது குறித்து விரைவில் முடிவெடுக்கிறோம். மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் கவலையளிக்கின்றன. நிச்சயம் ஆய்வுக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்த்து ஆவன செய்வோம்" என்று கூறியிருந்தால் அது கண்ணியமான சொற்களாக இருந்திருக்கும்.

**ஆனால் மாநில பேரிடர் நிதிக்கு வழமையாக வழங்க வேண்டிய நிதியைக் கொடுத்ததே ஏதோ இந்த கடும் பேரிடரை சந்திக்கக் கொடுத்தது போலத் திரித்துப் பேசுவதும், பேரிடரின் கடுமையைக் குறித்த மாநில அரசின் அறிவிப்பினை அவமதித்து ஏளனம் செய்யும் வகையில் பேசுவதும் ஆணவப் போக்கினையே வெளிப்படுத்துகிறது.**

### யார் வீட்டு சொத்து?

**தேசியப் பேரிடர் நிதி எங்கிருந்து வருகிறது? ஒன்றிய அரசு நிலவில் பயிர் செய்து கொண்டு வருகிறதா? அது தமிழ் நாட்டு மக்களும் தரும் வரிப்பணம்தானே? இங்கே புகைக்கப்படும் ஒவ்வொரு சிகரெட்டிலிருந்தும் பெறப்படும் செஸ் வரியும்தானே தேசிய பேரிடர் நிதி? அது மாநிலங்கள் தேவைப்பட்டால் கேட்டுப் பெறத்தானே இருக்கிறது?**

**இதைச் சுட்டிக்காட்டத்தான் அமைச்சர் உதயநிதி உங்கள் "மரியாதைக்குரிய" அப்பாவின் வீட்டு சொத்தா என்று கேட்டார். ஒன்றிய ஆட்சியாளர்கள் தங்கள் பதவிக்குரிய கண்ணியத்துடனும், பொறுப்புடனும், மக்கள் மீதான அக்கறையுடனும் பேசினால் இது போல கேட்க வேண்டிய தேவை எழாது.**

உண்மையில் பேரிடர் எவ்வளவு கடுமையானது, அதற்கு நிவாரணம் வழங்க எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதையெல்லாம் கணக்கீடு செய்ய கால அவகாசம் தேவைப்படும். ஆனால் சேதங்களின் பரிமாணம் கண்கூடாக இருக்கும்போது இது "கடுமையான" பேரிடர், ஆங்கிலத்தில் சொன்னால் "Severe" என்பதையும், அதற்கு மாநில நிதியான 1200 கோடி ரூபாய் போதாது என்பதையும் மதிப்பிட அதிக அவகாசம் தேவையில்லை.

எனவே இடைக்கால நிதியாக மாநில அரசு கேட்கும் கூடுதல் 2,000 கோடி ரூபாயை உடனே ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். ஏனெனில் வழிகாட்டு நெறிமுறைகளில் "உடனடி" (Immediate) என்ற வார்த்தையும் இடம் பெற்றிருப்பதை மேலே காட்டிய விதிமுறை 3.1இல் காணலாம். பின்னர் விரிவான கணக்கீட்டிற்குப் பிறகு கூடுதல் தொகையைத் தரலாம்.

### பேரரசாக கருதிக்கொள்கிறதா ஒன்றிய அரசு?

**தினமலர் நாளேடு கருத்தியல் அளவில் பாரதீய ஜனதா கட்சியை ஆதரிக்கக் கூடியது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், அது அரசியலமைப்பு சட்டம் வகுத்துள்ள கூட்டாட்சி தத்துவத்தை மதிக்க வேண்டும். ஒன்றிய நிதியமைச்சர் கையில் பணத்தை வைத்து விசிறிக்கொள்வது போலவும், அமைச்சர் உதயநிதி அவரிடம் யாசகம் கேட்பது போலவும் கேலிச்சித்திரம் வரைவது அரசியலமைப்பு சட்டத்தை கேவலப்படுத்துவதாகும்.**

**மாநில அரசுகள் ஒன்றிய அரசுக்கு கப்பம் கட்டும் சிற்றரசுகள் அல்ல. ஒன்றிய அரசு அவற்றை அடக்கி ஆளும் பேரரசும் அல்ல. இறையாண்மை, இறையாண்மை என்று மூச்சுக்கு முந்நூறு முறை புலம்பும் பா.ஜ.க. கட்சியினர் இறையாண்மை அரசிடம் இல்லை, அது மக்களிடம் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இது மக்களாட்சி.**

அனைத்து மாநில மக்களின் உழைப்பில்தான், உற்பத்தியில்தான், வரிப்பணத்தில்தான் தேசம் என்பது சாத்தியமாகிறது. அதிகாரம் என்பது அவர்கள் கையில்தான் உள்ளது. ஆட்சியாளர்கள் மக்களுக்கு சேவை செய்யவே அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஒன்றிய அரசாங்கத்தை வாக்களித்து உருவாக்கிய மக்கள்தான், மாநில அரசையும் வாக்களித்து உருவாக்கியுள்ளார்கள்.

**மாநில மக்களுக்கு ஒரு பேரிடர் பாதிப்பு என்றால் அவர்கள் ஏன் யாசகம் கேட்க வேண்டும்? யாரிடம் கேட்க வேண்டும்? அவர்கள் உரிமையைத்தான் கேட்கிறார்கள். மாநில அரசாங்கம் அதனால் ஆன அனைத்தையும் செய்து வருகிறது. மேலும் மேம்பட்ட நிவாரணம் வழங்க அதற்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது. அதைக் கேட்டால் அதன் பெயர் யாசகமா? அமைச்சர் உதயநிதியின் சுயமரியாதை மிக்க உரிமைக்குரலைக் கேட்டு மிரண்டுதானே தினமலர் கேலிச்சித்திரம் வரைகிறது?**

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இது வரை மக்களை தேர்தல் களத்தில் சந்தித்ததில்லை. வாக்கு கேட்டதில்லை. கட்சியால் மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சராகி விடுகிறார். அவர் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு எதிர்வரும் 2024 தேர்தலிலாவது மக்களவை தொகுதி ஒன்றில் களம் காண வேண்டும். அப்போதுதான் இது மக்களாட்சி என்று அவருக்குப் புரியும்.

**தினமலர் நாளேடு மக்கள் வாங்குவதால்தான் நிலைத்திருக்கிறது. மக்கள் உணர்வுகள் புரியாமல் அது கேலிச்சித்திரம் வரைந்தால் அதையும் ஒரு நாள் மக்கள் புறக்கணிக்கக் கற்பார்கள். மக்களாட்சியில் மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டிய ஊடகங்களே ஆட்சியாளர்களின் ஆணவத்துக்கு வெண்சாமரம் வீசக்கூடாது.**

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்



சமூகம் சமத்துவம் பெற, தன் பகுத்தறிவு கொள்கையின் வழி சமூகத்தை சீர்திருத்த வந்த அறிவுச்சுடர் தந்தை பெரியாரின் 50வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகரக் கழகச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட, மாநகர, பகுதிக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் சமூக நலத் துறை சார்பில் மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 10, 12ஆம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு படித்த 177 ஏழைப் பெண்களுக்கு 1 கோடியே 58 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருமண நிதி உதவி மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், ஒன்றியப் பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், ஒலக்கூர் சொக்கலிங்கம், மரக்காணம் தயாளன் ஆகியோர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரக் கழக செயற்குழுக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமானப் பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமானகே.ஆர்.என்.இராஜேஸ்குமார்தலைமைதாங்கிசிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் எம்.எல்,ஏ ராமலிங்கம், மாநில நிர்வாகிகள் ப.ராணி, நக்கீரன், மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், கிழக்கு நகர செயலாளர் செ.பூபதி, மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நகர் மன்றத்தலைவர் து.கலாநிதி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நகரமன்ற உறுப்பினர்கள் நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் மருத்துவ முகாம்!

சென்னை, டிச. 27 -

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு60க்குட்பட்ட அன்னை சத்யா நகரில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினையும், கொசுத்தடுப்பு நடவடிக்கைகளையும், கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையாளர் டாக்டர்.ராதா கிருஷ்ணன் நேற்று முன்தினம் (25.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொது மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடி கொசு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்ககளின் அறிவுறுத்தலின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பொருட்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள், கனமழைக்கு பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளான மருத்துவ முகாம்கள், மழைநீர் வடிந்த பகுதிகளில் சுத்தம் செய்யும் பணிகள் போன்றவற்றில் தனி கவனம் செலுத்தி கண்காணிக்க அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழைக்கு பிறகு எந்த வொரு தோற்று நோயும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் பொதுமக்கள் அணைவரும் கவன குறைவாக இருக்கக் கூடாது என்ற காரணத்தினால் இந்த மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



நாமக்கல் மாவட்டம், எளச்சிபாளையம் ஒன்றியம் மற்றும் குமாரபாளையம், பள்ளிபாளையம் நகராட்சிகளில் ரூ.5.59 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகரமன்றத் தலைவர்கள் த.விஜய்கண்ணன், மோ.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் எம்.தங்கவேல், செல்வம், நாச்சிமுத்து, இளங்கோவன், நகரச் செயலாளர்கள் அ.குமார், ஞானசேகரன், அ.ரவிச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை – திருமயம் ஒன்றியத்தில்

# வேலை வாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, டிச. 27 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி (23.12.2023) அன்று குதுவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் இலவச திறன் பயிற்சிக்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வு, மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்கள், மாணவ, மாணவிகளின் நலனிற்காக எண்ணற்ற பல்வேறு சிறப்பான திட்டங்களையும், வேலைவாய்ப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது. அந்தவகையில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழா துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் தொழில் துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 104க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர். அயல்நாட்டு வேலை வாய்ப்பிற்கான பதிவு வழிகாட்டல், சுயதொழில், வங்கி கடன் உதவிகள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து பிரத்தி யேக அரங்கம் அமைத்து ஆலோசனை அளிக்கப்படுகிறது. மேலும், மாவட்டத்தில் உள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு இலவச திறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்து ஆணைகள் வழங்கப்படுகிறது.

இத்தனியார்துறை முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ. டிப்ளமோ, பி.இ. நர்சிங் படிப்புகள் போன்ற கல்வித்தகுதியுடைய 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களும் பங்கேற்று, தங்களது தகுதிகளுக்கேற்ப பணிநியமனங்களை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை உரிய முறையில் பெற்று தங்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலா முத்து, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொது) மோ.மணிகண்டன், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (தொ.வ) பெ.வேல்முருகன், உதவி திட்ட அலுவலர் கே.தில்லைமணி, செந்தூரன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மேலாண்மை இயக்குநர் ஆர்.வயிரவன், முதன்மை செயல் அதிகாரி முனைவர்.ஏ.வி.எம்.எஸ்.கார்த்திக், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், வட்டாட்சியர் புவியரசன், கணேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட

# பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீரமைப்புப் பணிகள்!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

நெல்லை, டிச. 27-

திருநெல்வேலி மாவட்டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி ஆற்றிலிருந்து பார்கிட் மாநகர் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உறைகிணறு மற்றும் குடிநீர் குழாய்கள் முழுவதுமாக சேதமடைந்தள்ளதையும் மற்றும் கங்கைகொண்டான் சிப்காட்டிற்கு தண்ணீர் செல்லும் குடிநீர் குழாய் முழுமையாக சேதமடைந்துள்ளதையும் மேற்கொண்டு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டார்.

மேலும், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனைக்கு குடிநீர் எடுத்தும் எடுக்கும் உறைகிணறுகள் இரண்டும் சேதமடைந்துள்ளதையும், மானூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் எடுத்தும் செல்லும் இரண்டு உறைகிணறுகள் சேதமடைந்துள்ளன. அதில் ஒரு உறைகிணறு சரி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள உறைகிணறுகள் சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதையும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பார்வையிட்டார்.

தொடர்ந்து, சிவந்திப்பட்டி ஊராட்சி நெஞ்சான்குளம் கரை மழை வெள்ளத்தின் காரணமாக உடைப்பு ஏற்பட்டுள்ளதையும், மேற்கொண்டு சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் பார்வையிட்டார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: -

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களிலும் இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. வருவாய்த்துறை, நீர் வளத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத் துறை, மின்சாரத்துறை ஆகிய துறைகள் இணைந்து வெள்ள சேதப்பணிகளை போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என அவர் தெரிவித்தார்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு தாராபுரம் பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு தாராபுரம் நகர கழகச் செயலாளர் சு.முருகானந்தம் தலைமையில் ஆதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ். தனசேகர், தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாப்புக்கண்ணன், நகர அவைத் தலைவர் ப.கதிரவன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பிரபாவதிபெரியசாமி உள்பட நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, நகர, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாகூர் ஆண்டவர் தர்கா 467 ஆம் ஆண்டு கந்தூரி விழா!

## அமைச்சர் கே.எஸ்.செஞ்சிமஸ்தான் – என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, டிச. 27 -

உலக புகழ் பெற்ற நாகை மாவட்டம் நாகூர் ஆண்டவர் தர்கா 467ம் ஆண்டு கந்தூரி விழா கடந்த 14ம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. சந்தன கூடு மற்றும் சந்தனம் பூசும் விழாவிற்கு தேவையான 45 கிலோ சந்தன கட்டைகளை தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முக்கிய விழாவாக சந்தன கூடு ஊர்வலம் கடந்த 23ம் தேதியும் , சந்தனம் பூசும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த சந்தன கூடு மற்றும் சந்தனம் பூசும் விழாவில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டார். அதன் பின் 1500 பேருக்கு அன்னதானம் வாங்கினார். பின்னர் தர்காவில் நடைபெறும் மராமத்து பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் நாவர் தர்காவில் சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் செய்தியாளர்களுக்கு பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு பிறகு சிறுபான்மை மக்களுக்கும், தர்காக்களுக்கும், பள்ளிவாசலுக்கும் பாதுகாப்பான நிலையை உருவாக்கி தருகிறார் என்பதை நாம் அறிவேம். தமிழக அரசு சார்பில் ரூ. 10 கோடியை வழங்கி பள்ளி வாசல் பராமரிப்பு பணிக்காக இந்த நிதி ஒதுக்கியுள்ளோம். இதேப்போல் புகழ் பெற்ற தர்காக்களுக்கு தலா ரூ.2 கோடி என்று ரூ.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக நாகூர் தர்காவிற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த பணிகள் முழுமையாக நடைபெற்று வருகிறது. இதேப்போல் தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற தர்காக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு மு ன்வந்துள்து. தமிழ்நாடு முழுவதும் உள்ள நீண்ட கால மான தேவாலயங்களுக்கும் சிறப்பு திட்டம் ரூ. 10 கோடி விடுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது 4 தேவாலயங்களுக்கு தலா ரூ.2கோடி ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 4 தேவாலயங்களுக்கு இதுவரை ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர், கிருஸ்துவர்கள் அடக்கஸ்தலம், கமரஸ்தான் ஆகிய இரண்டிற்கும் சுற்றுச்சுவர் அமைக்க பணியும், கூடுதல் இடத்தினை அரசாங்கம் மூலம் பெற்று தரும் பணியையும் சிறப்பு திட்டமாக செயல்படுத்த தலா ரூ. ஒரு கோடி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு இடம் என்றால் அந்த இடத்தை பெற்று வழங்கிடுவது, தனியார் இடம் என்றால் அந்த இடத்தை பேச்சுவார்தை மூலம் பெற்று தரப்படும். கிருஸ்துவ தேவாலங்களில் பணியுரியும் உபதேஸ்தவர்களுக்கு பணியாளர்களுக்கு நலவாரியம், பள்ளிவாசலில் பணியாற்றும் உலமாக்களுக்கு ஒய்வூதிய திட்டம், உலமாக்களுக்கு நலவாரியம், ஏழை எளிய பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்க அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்திடவும், சிறுபான்மை மக்கள் தொடர்ந்து கல்வி கற்கவும், 3ம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்பு 6ம் வகுப்பில் இருந்து 10ம் வகுப்பி படிக்கும் மாணவர்களுக்கு தலா ரூ.500, ரூ,1000 வழங்கப்பட்டு வருகிறது.

புனித ஹச்சு பயணம் மேற்கொள்பவர்களுக்கு ரூ. 5 கோடி வழங்கி பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. அதுப்போல் கிருஸ்துவ மக்கள் புனித யாத்திரை ஜெர்சலம் செல்வதற்காக கடந்த ஆண்டும், இந்த ஆண்டுக்கும் ரூ 2 கோடியே 32 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் ஜெருசலம் செல்லவில்லை, இந்த ஆண்டு பயணம் மேற்கொள்ளும் நேரத்தில் இஸ்ரேலில் போர் நடக்கும் காரணத்தால் யாரும் செல்ல வில்லை. இருந்தாலும் அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனி நபர் ஜெருசலம் செல்ல பதிவு செய்து விட்டு வந்தால் அவர்களுக்கு அரசு மானியம் ரூ. 37,500 வழங்கப்படும். பெண்களுக்கு ரூ. 60 ஆயிரம் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள அரசின் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உலமாக்கல் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு விலையில்லா மிதி வண்டி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் பகுதியில் இந்து, முஸ்லீம், கிருஸ்துவர்கள் ஒன்றாக இணைந்து வாழகூடியதை நல்ல நிகழ்வு இந்த மண்ணில் உள்ளது. இதைதான் இந்தியா முழுவதும் பல்வேறு வேற்றுமையகளில் ஒற்றுமை காண வேண்டும் என்பது தான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம். அதுதான் அடித்தலம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று ஆட்சியை நடத்துகிறார் நம்முடைய முதலமைச்சர். எம்மதமும் சம்மதம், ஒன்றே குலம் ஒருவனே தேவன், ஏழை சிரிப்பில் இறைவனை காண்போம் என் தத்துவம் எல்லா மதத்திலும் இதைதான் சொல்லப்படுகிறது.

வந்தவரை வரவேற்று வாழ வைக்கும் தமிழகம். தமிழக மக்களுக்குஅவர்களின் உரிமைகள் தமிழக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அந்த அரசாங்கம் நிறைவேற்றும் அந்த திட்டங்களுக்கு ஆளுநர் உடன் அனுமதி வழங்க வேண்டும் என்று தான் நாங்கள் திரும்ப, திரும்ப கேட்கிறோம். மக்களாட்சி தத்துவத்திற்கு இடையூறாக இருக்காதீர்கள், மக்களாட்சி தத்துவத்திற்கு நீங்கள் ஆதரவாக இருங்கள், நீங்களும் மக்களுக்கு ஆதரவாக இருந்து அந்த நல்ல பெயரை எடுத்துக்கொள்ளுங்கள். வெள்ள சேதம் ஏற்பட்டத்தை முதல்வர் இரவு பகலாக சென்று பார்க்கிறார். ஒன்றிய அரசு வழங்க வேண்டிய உரிய தொகை கிடைக்கவில்லை என்று நாங்கள் சுட்டி காட்டுகிறோம்.

இவ்வாறு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அமைச்சருடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம், ஆர்.செந்தில்குமார், நாகூர் தர்கா அறங்காவலர் அலோசனை குழு தலைவர் செய்யதுமுகமதுகாமில்சாகிப் இந்து சமய அறநிலையத் துறை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரத்தினம் மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயிலில் தந்தை பெரியார் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஶ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கடலாடி அ. பிரணவநாதன்

டிசம்பர் 27 (2010)



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியக் கழகச் செயலாளராக இருபது ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஒரு முறை மாவட்ட துணைச் செயலாளராகவும், இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கடலாடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, 24.12.2023 அன்று, முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், அவரது மகன் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞருமான ரிச்சர்ட்சன் வில்சன் ஆகியோர், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், கழக செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ அவரது மகனுடன், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், முன்னாள் ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர் அகஸ்டின் பாபு, கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் அருட்தந்தை ராஜ், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (25.12.2023), முகாம் அலுவலகத்தில், பாரத் ஸ்கேன்ஸ் மேலாண்மை இயக்குநர் இமானுவேல், கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




# திராவிடப் போராளிகள்

**48** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## சற்குணபாண்டியன்: திராவிட இயக்க தீபம்..!




*1950*-களின் தொடக்கத்தில், திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் 13 வயது சிறுமி ஒருத்தியின் குரல் ஒலித்தது. கூட்டத்தை வேடிக்கை பார்த்துவிட்டுப் போகும் மனிதர்களைக்கூட, நின்று கேட்கவைத்த இனிமையும் உறுதியும் நிறைந்த குரல். தோற்றத்தில் எளிமை. கருத்திலோ புரட்சி.

‘தமிழச்சியின் கத்தி’ என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதையை எடுத்துக்காட்டி, உரிமைப் போர் முரசாய் முழங்கிய அந்தச் சிறுமிதான் பின்னாளில் இவர் ‘சொல்லின் செல்வி’ என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட சற்குணம் ஆவார்.

1941 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், தளவாய்புரத்தில் பிறந்த சற்குணம் இளம் வயதிலேயே நினைவாற்றலும் பேச்சுத் திறமையும் வாய்ந்தவர். அவரது தந்தையார் திராவிடர் கழகத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர். தன் மகளை உரிமை உணர்வோடும் அரசியல் தெளிவோடும் வளர்த்தவர். பள்ளியிலும் இலக்கிய மேடைகளிலும் தன் பேச்சாற்றலால் பாராட்டுகள் பெற்ற சற்குணத்தை திராவிட இயக்க மேடைகளில் பேசவைத்தவரும் அவரே.

### மேடையில் மாணவி பேச்சு!

கொள்கையைக் கற்றுக்கொடுக்க வழிகாட்டிகளும், வாய்ப்புக் கொடுக்க பெரியோர்களும் அமைந்ததோடு சற்குணம் என்ற பெண்ணின் கொள்கைப் பற்றும், பேச்சாற்றலும், திராவிட இயக்கப் பற்றாளர்களின் பாராட்டைப் பெற்றது. அதனால், அவரை தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அழைத்துப் பேச செய்தார்கள்.

பள்ளி மாணவியின் மேடை முழக்கங்கள் தலைவர்கள் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டன. மிக விரைவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில், பேசும் வாய்ப்பு சற்குணத்துக்குக் கிட்டியது. அதுவும் எப்படிப்பட்ட ஒரு வரலாற்று நிகழ்ச்சி.

1956 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகளிர் மன்றம் சத்திய வாணிமுத்து அம்மையாரின் தலைமையில், முறைப்படி செயல்படத் தொடங்கியது. பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்த்துரையோடு நிகழ்ந்த அந்த மகளிர் மன்றத் தொடக்க விழாவில், தலைமையேற்றவர் டாக்டர் தருமாம்பாள்.

தொடக்க உரை ஆற்றியவர் வெற்றிச்செல்வி அன்பழகன் (பேராசிரியர்), பாராட்டு வழங்கியவர் புவனேசுவரி நடராசன் (என். வி. என்), தொடக்க உரை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

சொற்பொழிவாளர்கள் இராணி அண்ணாதுரை, அருண்மொழி வில்வம் என இப்படித் தொடரும் பேராளுமைகளின் பட்டியலில் ‘சற்குணா’ என்று அவர் பெயர் இடம்பெற்றது. அந்த நிகழ்வு முடிந்த பிறகு ‘திராவிடன்’ இதழில் வந்த செய்திக் குறிப்பில் ‘மாணவி சற்குணம்’ பேசினார் என்று குறிப்பிடப்பட்டது.

### மாணவர் போராட்டக் களங்கள்

தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம் பேச்சாளராகவும், மாணவர் அணியின் செயல்வீரராகவும் செயல்பட்ட சற்குணம் அவர்களின் உரைகள், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முக்கியப் பங்கு வகித்தன. பேச்சாளராக மட்டுமன்றி சிறந்த களப்பணியாளராகவும் சற்குணம் செயல்பட்டார்.

இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கான மாணவர் போராட்டக் களங்களிலும் அவரது குரல் ஒலித்தது. 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் வென்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வரானார். அதன்பின் திராவிடர் கழக மகளிர் அணியில் சற்குணம் அம்மையார் தீவிரமாகச் செயல்பட்டார்.

1971 ஆம் ஆண்டுச் சென்னை மாநகராட்சிக்கான தி.மு.க.வின் நியமன உறுப்பினராகச் சற்குணம் நியமிக்கப்பட்டார். அவரது சிறப்பான செயல்பாடுகள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றன. அலமேலு அப்பாதுரை போன்ற கழகத்தின் மூத்த பெண் தலைவர்களோடு இணைந்து பணியாற்றிய சற்குணம் அவர்களின் தன்னலமற்ற பணி அவருக்குப் பல பொறுப்புகளைக் கொடுத்தது.

### கழக மகளிர் அணியில்...

திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் தலைவராகவும், பின் கட்சிப் பொறுப்புகளில் உயர்நிலைப் பதவியான துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பினையும் பெற்றார். அவரது தலைமையில் தி.மு.க மகளிர் அணி புதிய எழுச்சியைக் கண்டது. புதிய வரவுகளாக ஆயிரக்கணக்கான பெண்கள் கழக மாநாடுகளில் பங்கேற்றனர். பேரணிகளில் எழுச்சியுடன் முழக்கமிட்டனர். மாநாடுகளில் பெண்களே பங்கேற்கும் பட்டிமன்றங்களை நடத்தி, அதில் அவர் நடுவராக இருந்து இலக்கியம், அரசியல் எனச் சுவைபட உரையாற்றினார்.

டாக்டர் தர்மாம்பாள் நூற்றாண்டு விழாவை கலைஞர் அவர்கள் பாராட்டும்படி நடத்தியதோடு உலக மகளிர் தின விழாக்களையும் நடத்தி தி.மு.க மகளிர் அணித் தோழர்களுக்குப் புதிய செய்திகளை அறிந்து கொள்ளவும் பேசவும் வாய்ப்புகளை உருவாக்கினார்.

### மகளிர் ஆணையத் தலைவராக...

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் தோற்றாலும், அவசரநிலை உள்ளிட்ட அடக்குமுறைகளை எதிர்கொண்ட போதும், தன் நிலையை மாற்றிக்கொள்ளாத உறுதியான தொண்டராக வாழ்ந்து காட்டினார் சற்குணம். அவரது தன்னலம் கருதாத தொண்டு அவருக்கு, 1989-இலும் 1996-இலும் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பைக் கொடுத்தது. மக்களிடம் அவர் பழகிய முறையும் எளியவர்களிடம் காட்டிய அன்பும் மாறாத கொள்கையும் அவருக்கு வெற்றியைக் கொடுத்தன.

திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் சமூகநலத்துறை அமைச்சராகப் பணியாற்றிய போதும் பின் தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவராக நியமனம் பெற்ற போதும், தனது துறை சார்ந்த அதிகாரங்கள் மூலம் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு நலத்திட்டங்கள் முறையாகக் கிடைப்பதற்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் மிகச் சிறப்பானவை.

தந்தை பெரியாரின் கொள்கை வழியில் எப்போதும் விலகாத பற்றுடையவராக சற்குணம் அம்மையார் வாழ்ந்தார். திராவிடர் கழக மாநாடுகளிலும் அவரது சீர்திருத்த சிந்தனைகள் ஒலித்தன.

### கழகத் துணைப் பொதுச்செயலாளராக

திருமணத்துக்குப் பிறகு தனது பொது வாழ்வில் எவ்வித சரிவும் ஏற்படாமல் இருக்கக் குடும்பப் பொறுப்புகளோடு இயக்கப் பணிகளையும் தொய்வின்றித் தொடர்ந்தார்.

அவரது கணவர் பாண்டியன், மகன்கள் முத்து சோழன், குணசேகரன் எனக் குடும்பத்தினர் அனைவரும் சற்குணம் அம்மையாரின் அரசியல் பொது வாழ்க்கைக்குத் துணையாக இருந்தனர். மேலும் சற்குணம் அம்மையாரின் மருமகள் சிம்லா முத்து சோழன் சென்னை ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தலில் போட்டியிட்டார்.

அம்மையாரின் தொண்டினைப் பாராட்டி, கலைஞர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அவருக்கு ‘கலைஞர் விருது’ வழங்கப்பட்டது. அதுமட்டுமா 14.8.2016 ஆம் ஆண்டு அம்மையார் உடல்நலக்குறைவால் மறைந்த போது ‘எனக்கு நானே ஆறுதல் சொல்லிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன்’ என்று அந்த சின்னஞ்சிறுமியாக தி.மு.க. மேடையில் வலம் வந்த சற்குணம் பெற்ற வெற்றிகளையும் சாதனைகளையும் நினைவுகூர்ந்து ‘திராவிட இயக்கத்தின் தீபமாய் மாதர் குலத் திலகமாய் விளங்கிய சற்குணம் நம்மை விட்டுச் சென்றுவிட்டார்’ என்று குறிப்பிட்டார்.

மாணவி சற்குணமாகத் தன் பொதுவாழ்வைத் தொடங்கித் தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளராக உயர்ந்து, சாதனைகள் புரிந்த சற்குணப் பாண்டியன் அம்மையார் மறைந்த பின்பு, 2018 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மண்டல மாநாட்டின் கொடி மேடைக்கு ‘சற்குணபாண்டியன் நினைவு கொடிமேடை’ என்று பெயரிட்டார், இன்றைய முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பெண்ணுரிமை என்பது திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். அதனால்தான் சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலம் முதல் ஆண்களுக்கு நிகராக எழுத்திலும் பேச்சிலும் போராட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து இருந்து வருகிறது. அந்தத் தொடர் வரலாற்றில் 62 ஆண்டுகள் அயராது பங்காற்றிய, ‘திராவிடப் போராளி சற்குணம்’ என்பது அவரது தனிச்சிறப்புடைய வரலாறாகும்.

(வருவார்கள்...)

---

## பெரியாரை நினைப்பது, வாழ்நாள் கடமை!

‘திராவிட ஆய்வு’ என்கிற சமூக வலைதளப் பக்கத்தில் ‘பெரியார் நிகழ்த்திய புரட்சி’ என்கிற வகையில், பதிவிடப்பட்டிருந்த கருத்துகளில் கவனம் பெற்றது இது. “பிராமணப் பெண்ணான எனக்கு, ஏன் பெரியாரைப் பிடித்தது? அப்படி பார்ப்பன பெண்களுக்கு என்ன செய்துவிட்டார்?” என ஒரு பெண் கேள்வி எழுப்பிப் பதிலும் அளித்துள்ளார்.

“பெரியாரின் மூலம் பிராமணப் பெண்கள் நிறையவே பலன் அடைந்துள்ளனர்.அந்தக் காலத்தில் ‘மொட்டைப் பாப்பாத்தி’ என்ற கிண்டலான சொல்லாடல் இருந்தது. முக்கியமாக, பார்ப்பனப் பெண்கள் தன்னுடைய கணவனை இழந்த பிறகு மொட்டை அடித்து வீட்டின் ஓரமாக உட்கார வைத்துவிடுவார்கள். அது பல வருடங்களாக வழக்கத்தில் இருந்தது. பெரியாருடைய பெண் விடுதலைப் போராட்டத்துக்குப் பின் இந்த வழக்கம் முழுவதுமாக தமிழ்நாட்டில் இருந்து கைவிடப்பட்டது.

அது மட்டும் இல்லாமல், மநுஸ்மிருதியின் படி பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தரக்கூடாது என்றும், அவர்களை மாதவிடாயின் போது ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற வழக்கங்களை, பார்ப்பன ஆண்கள் அவர்களுடைய வீட்டுப் பெண்களிடம் காண்பித்து வந்தனர். பெண்கள் அடக்குமுறை உள்ள காலகட்டத்தில், மறுமணம் என்பது நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குக் கடினமான ஒன்றாக இருந்துள்ளது.

‘கருத்தடுப்பு’, ‘பெண்கள் கல்வி’, ‘தேவதாசி முறை’ அனைத்துமே சாஸ்திரத்தின் மூலம் பிராமணப் பெண்களை ஒடுக்கி வைத்தன. பின் பெண்கள் அடிமைத்தனத்துக்கு எதிரான பெரியாரின் எதிர்ப்புக் குரல், கண்டிப்பாக பார்ப்பன பெண்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இன்றளவும் இருந்துவந்துள்ளது.

பெரியார், கடைசிவரை பெண்களுக்கான முற்போக்கு சிந்தனை மற்றும் செயல்களை முன்னெடுத்தார்.

தற்பொழுது தமிழ்நாட்டில் பெண்களால் படிக்க முடிகிறது என்றால், அதற்கு பெரியாருடைய பங்கு கண்டிப்பாக உண்டு. அதற்கு வாழ்நாள் முழுக்கக் கடமைப்பட்டுத்தான் உள்ளோம்” என்கிறது, அந்தப் பதிவு.

## :ப்ளாஷ்பேக்



### பேசாதீர்... நடியுங்கள்..!

1996 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ‘முரசொலி’ நாளிதழில் ‘ஆண்டியும் - போண்டியும்’ என்ற நகைச்சுவைப் படைப்பை, தொடராக எழுதி வந்தார். அந்த நகைச்சுவைத் தொடரை நாடகமாக நானும், கவிஞர் சிங்கார சடையப்பனும் தலைவர் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆகியோர் முன்னிலையில் அண்ணா அறிவாலயத்தில் அரங்கேற்றம் செய்து கட்டினோம். அப்போது பேச்சாளர்களான எங்களை, ‘மேடைகளில் பேசுவதை நிறுத்திவிட்டு, இந்த நாடகத்தையே இருவரும் தமிழ்நாடெங்கும் நடித்துக் காட்டுங்கள்’ என்று அறிவுறுத்தினார். அப்படியான சமயத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.


நன்மாறன்

**-கவிஞர் நன்மாறன், மாநிலத் துணைச் செயலாளர், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, மற்றும் கழகப் பேச்சாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பெரியாருடன் போராட்டக் களம்

**1952-இல் இந்தியை நாட்டின் அதிகாரப்பூர்வ அலுவல் மொழியாக்கும் முயற்சியில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டது. பெரியாரும் அண்ணாவும் கொதிப்படைந்து போராட்டத்தை அறிவித்தனர். ஈரோட்டில் அண்ணாவும், திருச்சியில் பெரியாரும் போராட்டத்துக்குத் தலைமையேற்றனர். பெரியார் தலைமையிலான திராவிடர் கழக ஊர்வலமும், கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஊர்வலமும் திருச்சி தெப்பக்குளம் பகுதியில் சந்தித்தன. பெரியாரும் கலைஞரும் சேர்ந்து திருச்சி ரயில் நிலையத்தில் இந்தி எழுத்துகளை மை பூசி அழித்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 341




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131